1986 ஏப்ரல் 26]

கிறது. ஆகவே இந்திய அரசு அதற்கான அனுமதியைக் கொடுத்து அதை செய்ய வேண்டும். திட்டத்தின் மதிப்பீடு மற்ற விவரங்கள் எல்லாம் தற்போது என்னிடத்தில் இல்லை. நெய்வேலி நிறுவனமே அதை தயாரித்து இந்திய அரசுக்கு ஏற்கனவே அனுப்பியிருக்கிறது.

தமிழ்நாடு அரசுக்கு நெய்வேலி நிறுவனத்திலிருந்து கிடைப்பது, மத்திய அரசு வகுத்து இருக்கின்ற ஒரு கொள்கையின் அடிப்படையில் பங்கிட்டு நமக்குத் தருகிறார்கள். ஏன் என்றால் நெய்வேலியில் உற்பத்தி ஆகின்ற மின்சாரத்தைப் பொறுத்த வரையில் தென் நாடு முழுவதும் 4 மாநிலங்களுக்கு உரிமையுண்டு என்பது தான் மத்திய அரசின் வாதம்.

தஞ்சை அணைக்கரைப் பகுதியில் சிறிய நீர் மின் நிலையம்

57 —(*வினா எண். 5117)—திரு.இ.கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் கீழணை (அணைக்கரை) யில கொள்ளிடத்திலிருந்து பிரியும் இராஜா வாய்க்காலில் வேகமாக பாயும் தண்ணீரின் வேகத்தை பயன் படுத்தி சிறிய நீர் மின் நிலையம் ஒன்று (Mini Hydro Electric Power Generation) அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. இ. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமகுண்டம் சூப்பர்தெர்மல் பவர் ஸ்டேஷனிலிருந்து கிடைக்க வேண்டிய பவரை பெறுவதற்காக ஸ்ரீபெரும்புதூரில் ஒரு சப் ஸ்டேஷன் மட்டுமே கட்ட வேண்டி உள்ள நிலையில் அதைக்கூட ஏற்பாடு செய்யாத இந்த நிர்வாகம் இது போன்ற புதுமையான அகில உலக அளவில் ஒத்துக் கொள்ளப்பட்ட நல்ல சிறிய திட்டங்களை செயலாற்றுமா என்பதிலே எனக்கும் சந்தேகம் உண்டு. அதை இல்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அகில உலகிலே, சிறிய தண்ணீர் போக்கிலே 10 அடி உயரம் இருந்தாலே போதும், 50 கிலோ வாட், 100 கிலோ வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய இயலும் என்றும், அதற்கு ரூ. 10,000 முதலீடு போதும் என்றும் திட்டங்கள் இருக்கின்றன. அதைப்போன்று, 'டிரைய்னேஜ் வாட்டரிலே' கார்பேஜ் இருந்தாலும், சிறு சிறு மின்சாரத் திட்டங்கள் இருந்தாலும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

மின்சாரம் உற்பத்தி செய்யக் கூடிய அளவில், அகில உலகிலே ஒத்துக்கொள்ளப்பட்ட திட்டங்கள் இருக்கின்றன. அதைப் போன்று சிறு சிறு, மினி பவர் ப்ளாட்டுகளை நிறைவேற்றி, தமிழ்நாட்டில் அந்தந்தப் பகுதிகளில் மின்சாரம் உற்பத்தி செய்து மின்சாரத் தட்டுப்பாட்டைக் குறைக்க, இனிமேலாவது சரியான நடவடிக்கை எடுக்கப்படுமா; அந்த முயற்சியை மாண்புமிகு அமைச்சரவர்கள் மேற்கொண்டு நடவடிக்கையை எடுப்பார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

(முற்பகல் 9–10.)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சிறிய நீர் மின் உற்பத்தித் திட்டங்கள் மின் வாரியத்தினால் எத்தனையோ உருவாக்கப்பட்டு வருகின்றன. அந்தத் திட்டங்களில் இந்தத் திட்டம் இடம் பெறவில்லை என்பதைத் தான் குறிப்பிட்டேன். சிறிய நீர் மின் திட்டங்களுக்கு நாம் கூடாது என்ற கொள்கையைக் கொண்டவர்கள் அல்ல. குறிப்பாக குறைந்த செலவில், அது சிறிய மின் திட்டங்களாக இருந்தாலும், பெருமளவிற்கு மின்சாரம் உற்பத்தி செய்யும் சாத்தியக் கூறுகள் உள்ள திட்டங்களை முதலில் எடுத்து, அவற்றை நிறைவேற்றிய பின்னர் தான், இவற்றைப் பற்றி எண்ணமுடியும். ஏற்கனவே நாம் உருவாக்கியிருக்கிற திட்டங்களுக்குப் போதுமான நிதி வசதி நம்மிடத்தில் இல்லை.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, சிறு மின் திட்டங்கள் மிக மிகக் குறைந்த முதலீட்டில் நிறைவேற்றப்பட என்று திட்டங்கள் தயாராக இருக்கின்றன. முன்பே குறிப்பிட்டது போல, ஒரு கிலோ வாட் மின் உற்பத்திக்கு ரூ. 10,000 போதும் என்று எக்ஸ்பர்ட் ரிப்போர்ட்ஸ் இருக்கின்றன. அதை மனதில் கொண்டு, தனியாக சிறு சிறு வாய்க்கால்கள் கலிங்கல்கள் உள்ள பகுதிகளில் 10 அடி உயரத்தில் 265 லிட்டர் பர் செகண்ட் இருந்தால், ஒரு கிலோவாட் உற்பத்தி செய்யலாம் என்று எக்ஸ்பர்ட் ரிப்போர்ட் இருக்கிறது. அதைக் கவனத்தில் கொண்டு அமைச்சரவர்கள் செய்வார்கள் என்பதுடன் ' விண்ட் மில்ஸ் ' காற்று சுழற்சி மூலம் மின் உற்பத்தியை தூத்துக்-குடிப் பகுதியிலே வெற்றிகரமாக தமிழக அரசு நிறைவேற்றியதால், அடுத்த ஒரு திட்டத்திற்கு இப்போது மத்திய அரசு அனுமதித்து உருவாக்கப்படுவது, தஞ்சை மாவட்டத்தில் பரீட்சார்த்தமாக செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ? நாகையிலே........(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத்தலைவர்: தமிழகம் பற்றிப் பூராவும் பேச முடியாது. சுருக்கமாக, கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : நான் உதாரணத்திற்காகச் சொன்னேன். தஞ்சை மாவட்டத்தில் அதைச்செய்யலாம் அல்லவா ? நாகைக் கடற்கரைப் பகுதியில் விண்ட் மில்ஸ்

1986 ஏப்ரல் 26]

மூலம் மின் உற்பத்தியைச் செய்ய அரசு முன்வருமா? நாகை தெர்மல் பவர் ப்ளாண்ட் எந்த நிலையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஒரு கிலோவாட் ரூ. 10,000 என்றால், ஒரு மெகவாட் உற்பத்திக்கு என்னவாகும் என்பதை அந்த நிபுணர்களிடத்திலே மாண்புமிகு உறுப்பினர் கேட்டுத் தெரிந்துகொண்டு, இந்த சிறிய திட்டங்கள் சிக்கனமானதா என்பது பற்றிய முடிவிற்கு வர வேண்டும். காற்று சுழற்சி மூலம் மின்சார உற்பத்தி செய்ய வேண்டுமென்பது பற்றிய விவரங்களை திட்டத் துறை அமைச்சர் மூலமாக, தஞ்சை மாவட்டமனாலும் அல்லது தமிழகத்திற்கேயானாலும் பெற்றுக் கொள்வது சாலச் சிறந்தது.

ஜெயங்கொண்டம் பகுதியில் மின் இணைப்புகள்.

572—(*வினா எண். 6626)—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் ஜெயங்கொண்டம் சட்டமன்ற பகுதிக்கு உட்பட்ட கிராமங்களில் எத்தனை கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை?

(ஆ) அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) ஜெயங்கொண்டம் சட்டமன்ற பகுதிக்கு உட்பட்ட எல்லா கிராமங்களுக்கும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டு விட்டது.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் சட்டமன்றப் பகுதிக்கு உட்பட்டு, 20 பஞ்சாயத்துக்கள் உள்ளன. கிட்டத்தட்ட 248 கிராமங்கள் உள்ளன. இன்னும் புதியதாக வயல் வெளிகளில், தோட்டங்களில் கட்டப்பட்ட குடியிருப்புகளுக்கு மின்சார இணைப்பு தரப்படவில்லை. அரசு மூலமாக கட்டப்பட்ட வீடுகளுக்கும் மின் இணைப்பு தரப்படவில்லை. அவற்றுக்கு எல்லாம் அரசு தனியாக ஒரு தாக்கீது அனுப்பி, உடனடியாக மின் இணைப்பு கொடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, புதிய குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்குவதைப் பொறுத்தவரையில், ஒன்று வீட்டிற்கு மின்சாரம் வேண்டும்